**செய்தி வெளியீடு எண்: 956** **நாள்: 29.10.2010.**

**அன்னை தெரசா மகளிர் வளாகம்**

**திறப்பு விழா – 1.11.2010**

ஏழை, எளிய மற்றும் நலிவுற்ற பிரிவினரையும் உள்ளடக்கிய அனைத்துத் தரப்பு மகளிருக்கும் சம உரிமை மற்றும் சம வாய்ப்புகளை உருவாக்கித் தரும் வகையில் மகளிருக்கான வளர்ச்சித் திட்டங்களை இவ்வரசு முனைப்புடன் நிறைவேற்றி வருகிறது. அதன்படி மாநிலமெங்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் மூலம் பெண்களுக்கு பல்வேறு பயிற்சிகளை அளித்து வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதன் மூலம் பொருளாதார ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தியதுடன், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதிகளை உருவாக்கவும் தமிழக அரசு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்கு மாவட்ட மற்றும் ஒன்றிய அளவில் வணிக வளாகங்கள் கட்டப்பட்டு, அவற்றின் மூலம் இவ்வளாகங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்ய சென்னை, வள்ளுவர் கோட்டத்தின் அருகில் சுமார் ரூபாய் 15 கோடியே 33 இலட்சம் செலவில் புதிதாக வளாகம் கட்டப்பட்டுள்ளது.

அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் நினைவாக இக்கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் '**அன்னை தெரசா மகளிர் வளாகம்**' எனப் பெயர் சூட்டியுள்ளார்.

இந்த வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திடும் வகையில் நிரந்தர விற்பனை அரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கிராம மற்றும் மாவட்ட அளவில் செயல்படும் அனைத்து சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களையும் ஒருங்கிணைத்து விற்பனையை மேம்படுத்திடவும் இவ்வளாகம் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

மேலும் மகளிர் மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இயங்கி வரும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமையகம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலுவலகம் ஆகியவையும் இவ்வளாகத்தில் செயல்பட உள்ளன. இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒரே வளாகத்தில் தங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற முடியும்.

இவ்வளாகத்தினை வரும் நவம்பர் **1**ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள் திறந்து வைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. **மு. க. ஸ்டாலின்** அவர்கள் தலைமை ஏற்கவும், மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. **தயாநிதி மாறன்** அவர்கள் முன்னிலை வகித்து சிறப்பிக்க உள்ளார்கள்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. **மா. சுப்பிரமணியன்** அவர்களும், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திருமதி. **எஸ். மாலதி,** இ.ஆ.ப., அவர்களும் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குவார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. **கா. அலாவுதீன்,** இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் **கே. கோபால்,** இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை நல்க உள்ளார்கள்.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**